සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020

தரம் : 10

பெயர்/சுட்டெண்: **கணிதம்** / ගණිතය - I காலம்: 2 மணித்தியாலங்கள்


- **எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.**
- **பகுதி A இல் ஒரு வினாவுக்கு 2 புள்ளிகளும் பகுதி B இல் ஒரு வினாவுக்கு 10 புள்ளிகளும் வழங்கப்படும்.**

பகுதி - A

1. $4.5 \times 4.5 = 20.25$ எனின், $\sqrt{20}$ இன் பெறுமானத்தை முதலாம் அண்ணளவாக்கத்திற்குக் காண்க.

2. 5 மனிதர்கள் 3 நாட்களில் வேலையொன்றின் ¼ ஐ நிறைவேற்றினர் எனின், முழு வேலை எத்தனை மனித நாட்களாகும்.


3. உருவிலுள்ள ஆரைச்சிறையின் சுற்றளவு 25cm உம் அதன் வில்லின் நீளம் 11cm உம் எனின், அதன் ஆரையைக் காண்க.



4. விரிவை எழுதுக.

$(2x + 3)^2$

5. x இன் பெறுமானம் காண்க.



6. $A = \{x ; x$ ஓர் ஒற்றையெண், $1 \leq x < 10$ ஆகும்$\}$
இத்தொடையை மூலகங்களுடன் எழுதிக்காட்டுக.


இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
zoom
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk


7. தீர்க்க $\frac{8+x}{5} = 2$

8. வாகன இறக்குமதியின் போது சுங்கம் 40% தீர்வையை அறவிடுகிறது. ரூபா 450 000 பெறுமதியான வாகனமொன்றிற்குச் செலுத்த வேண்டிய தீர்வையைக் காண்க.

9. உருவிலுள்ள உருளையின் வெளிவளை மேற்பரப்பு முழுமையாக செவ்வக வடிவ விளம்பரத்தாள் ஒன்றினால் மூடப்பட்டுள்ளது. விளம்பரத் தாளின் நீள, அகலங்களைக் காண்க. (ஒட்டும் பகுதியை புறக்கணிக்க)




10. x இன் பெறுமானம் காண்க.



11. A, B என்பன தம்முள் புறநீக்கும் நிகழ்ச்சிகளாகும். $P(A) = \frac{1}{2}$, $P(B) = \frac{1}{3}$ எனின், P(AUB) ஐக் காண்க.


12. $V^2 = U^2 + 2as$ எனும் சூத்திரத்தில் a ஐ எழுவாயாக்குக.

13. உருவில் காட்டப்படுள்ள அரியத்தின் நிழற்றப்பட்ட முகத்தின் பரப்பளவு $18cm^2$ எனின், அரியத்தின் கனவளவைக் காண்க.



www.lkedu.lk

14. பின்வரும் முக்கோணிகளுள் ஒருங்கிசையும் முக்கோணிச் சோடிகயைத் தெரிவு செய்து அவை ஒருங்கிசையும் சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.




15. (3, 10), (0, 1) ஆகிய புள்ளிகளூடாகச் செல்லும் நேர்கோட்டின் சமன்பாட்டை எழுதுக.

16. உருவிலுள்ள நாற்பக்கல் ABCD ஓர் இணைகரமாகும். இடைவெளி நிரப்புக.

i) AO = ...

ii) $A\hat{B}C$ = ...




17. காரணி காண்க.

$x^2 + x - 20$


18. உருவிலுள்ள தகவல்களின் படி

i) AB, OX இடையிலான தொடர்பை எழுதுக.

ii) AX = OX எனின் நான் AB யின் நீளத்தைக் காண்க.




19. A, B என்பன 10m இடைவெளியில் அமைந்த இரு புள்ளிகளாகும். A, B ஆகிய இரு புள்ளிகளுக்கு சமதூரத்திலும் A யிலிருந்து 6m தூரத்திலும் அமைந்துள்ள P, Q ஆகிய புள்ளிகளை ஒழுக்கு தொடர்பான அறிவினால் பெறுக.



www.lkedu.lk

20. $10^{0.3010} = 2$ என்பதை மடக்கை வடிவில் எழுதுக.

21. உருவிலுள்ள தகவல்களின் உதவியுடன் $A\hat{C}B$ இன் பெறுமானம் காண்க.




22. 60 kmh^{-1} சீரான கதியில் செல்லும் வாகனம் 150km தூரம் செல்ல எடுக்கும் காலத்தைக் காண்க.

23. $6x^2$, $2xy^2$, $10y^2$ எனும் உறுப்புகளின் பொ.ம.சி. காண்க.

24. எண்பரம்பல் ஒன்றின் உத்தேச இடையாக 18 ஐப் பயன்படுத்திய போது விலகளிடை 12.4 ஆகக் காணப்பட்டது. அவ்வெண் பரம்பலின் உண்மை இடையைக் காண்க.

25. AC வட்டத்தின் விட்டமாகும். $D\hat{A}C = 52^0$ எனின், $D\hat{B}A$ ஐக் காண்க.



www.lkedu.lk

பகுதி - B

1. விமானமொன்றின் மூலம் வந்த பயணிகளுள் $\frac{1}{8}$ பங்கினர் இந்தியர்களாகும். எஞ்சியோரில் $\frac{5}{14}$ பங்கினர் ஐரோப்பியர்கள் ஆவர். மீதி இலங்கையர்களாவர்.

   i) ஐரோப்பியர்களின் எண்ணிக்கை மொத்தப் பயணிகளின் என்ன பின்னமாகும்?


   ii) இலங்கையர்களின் எண்ணிக்கையை மொத்தப் பயணிகளின் பின்னமாகத் தருக.

   iii) இலங்கையர்களுள் $\frac{2}{3}$ பங்கினரான பெண்கள் 90 பேர் ஆகும். விமானத்தில் வந்த மொத்தப் பயணிகள் எத்தனை பேர்?

   iv) ஒரு வெளிநாட்டவர் இலங்கைக்கு வரும் போது விசாக் கட்டணமாக ரூபா 8000 அறவிடப்படும். எனின், விமானத்தில் வந்த இந்தியர்களிடமிருந்து கிடைக்கும் மொத்த விசாக் கட்டணத்தைக் காண்க.

---

2. கண்காட்சி ஒன்றிற்காக பாடசாலைக் காணி வர்த்தகம், கலை, விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளாக்கப்பட்டிருந்த விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது.



   i) அரைவட்ட வடிவ காணித்துண்டின் வட்டவில் எல்லையின் நீளத்தைக் காண்க.

   ii) கண்காட்சிப் பிரதேசத்தின் சுற்றளவைக் காண்க.

www.lkedu.lk

iii) விஞ்ஞானப் பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட பகுதியின் பரப்பளவைக் காண்க.

iv) கலைப்பிரிவிற்கும் விஞ்ஞானப் பிரிவிற்கும் ஒதுக்கப்பட்ட பகுதியின் பரப்பளவைக் காண்க.

v) கலை மற்றும் வர்த்தகப் பிரிவுகளுக்கான பகுதிகளைப் பிரிக்கும் $28m^2$ பரப்பளவுள்ள பாதையை அளவீடுகளுடன் மேலே உருவில் வரைந்து காட்டுக.

---


3. வாகன விற்பனை நிறுவனமொன்று 2019 ஆம் ஆண்டுக்கான காலாண்டு வரியாக ரூபா 6000 ஐ செலுத்தியது. உள்ளூராட்சி நிறுவனம் ஆண்டு மதிப்பீட்டுப் பெறுமானத்தின் 12% ஐ வரியாக அளவிடுகிறது.
   i) வாகன விற்பனை நிறுவனத்தின் ஆண்டு மதிப்பீட்டுப் பெறுமானத்தைக் காண்க.

   ii) 2020 ஆம் ஆண்டு வாகன விற்பனை நிறுவனத்தின் ஆண்டு மதிப்பீட்டுப் பெறுமதி முன்னைய வருடத்திலும் 10% ஆல் அதிகரித்தது. 2020 ஆம் ஆண்டிற்கான வாகன விற்பனை நிறுவனத்தின் மதிப்பீட்டுப் பெறுமானத்தைக் காண்க.

   iii) 2020 ஆம் ஆண்டிற்கான வரியை முதல் காலாண்டில் ஒரே தடவையில் செலுத்தியமையால் வரித்தொகையின் 15% கழிவு கிடைத்ததெனின், 2019, 2020 ஆகிய இரு ஆண்டுகளிலும் வாகன விற்பனை நிறுவனம் செலுத்திய மொத்த வரியைக் காண்க.

www.ikedu.lk

4. ராதா, யமுனா, கங்கா, கவீஷா, சதுரி ஆகியோர் வேறு வேறாகச் சேமித்த ரூபா 2 நாணயங்களை ஒரே உண்டியலிலிட்டு ஒவ்வொருவரும் இட்ட நாணயங்களின் எண்ணிக்கைகளைக் காட்டுவதற்கு வரைந்த வட்டவரைபு காட்டப்பட்டுள்ளது.



i) யமுனா உண்டியலிலிட்ட நாணயங்களின் எண்ணிக்கையின் இருமடங்கு நாணயங்களை ராதா உண்டியலிலிட்டால், ராதாவின் ஆரைச்சிறைக் கோணத்தைக் காண்க.


ii) சதுரி உண்டியலிலிட்ட நாணயங்களின் எண்ணிக்கை 10 எனின், யமுனா உண்டியலிலிட்ட நாணயங்களின் எண்ணிக்கையைக் காண்க.

iii) உண்டியலிலுள்ள முழுப்பணம் எவ்வளவு?

iv) அடுத்த நாள் யமுனா ரூபா 16 உம், ராதா ரூபா 20 உம், ஆக ரூபா 2 நாணயங்களை உண்டியலில் இட்டனர். இந்நாளில் ஒவ்வொருவரும் உண்டியலிலிட்ட நாணயங்களின் எண்ணிக்கையைக் காட்டும் வட்ட வரைபில் சதுரிக்கான ஆரைச்சிறைக் கோணத்தைக் காண்க.

www.lkedu.lk

5. நிறுவனமொன்றின் ஊழியர் தொகை 50 ஆகும். அவர்களுள் 35 பேர் பெண்களாவர். ஒரு குறித்த தினத்தில் குடை கொண்டுவந்த ஊழியர்களின் எண்ணிக்கை 25 ஆகக் காணப்பட்டதுடன் அவர்களுள் 6 பேர் ஆண்களாவர்.



i) தொடை B ஐப் பெயரிடுக.

ii) மேற்கூறிய தகவல்களை வென்னுருவில் குறித்துக் காட்டுக.

iii) $A \cap B$ தொடையை விபரித்தெழுதுக.

iv) குறித்த தினத்தில் குடை கொண்டு வராத ஆண்கள் எண்ணிக்கை யாது?

v) $n(A \cap B')$ ஐக் காண்க.

www.lkedu.lk

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.

www.lkedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020

கணிதம் / **கணிதம்- II** தரம் : 10 காலம்: 3 மணித்தியாலம் 10 நிமிடங்கள்

- பகுதி Aயிலிருந்து ஐந்து வினாக்களையும் பகுதி Bயிலிருந்து ஐந்து வினாக்களையும் தெரிந்தெடுத்துப் பத்து வினாக்களுக்கு விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவின் சரியான விடைக்கும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.
- அடியின் ஆரை r ஆகவும் உயரம் h ஆகவும் உள்ள உருளையொன்றின் கனவளவு πr^2h ஆகும்.

பகுதி A

1. a) திரு சிரிசேன அவர்களின் வருட வருமானம் ரூபா 1,400,000 ஆகும். அவரது வருமானத்தில் முதல் ரூபா 500,000 இற்கு வருமான விலக்குப் பெறுவதுடன் அடுத்த ரூபா 500 000 இற்கு 4% உம் எஞ்சிய தொகைக்கு 8% உம் வருமான வரியாக செலுத்த வேண்டும். அவர் செலுத்த வேண்டிய மொத்த வருமான வரியைக் காண்க.

   b) 9% ஆண்டு எளிய வட்டிக்கு ரூபா 80,000 கடன் பெற்ற ராஜி இரு வருடங்களில் வட்டியுடன் கடனைச் செலுத்தினாள். அவள் செலுத்திய மொத்தத் தொகையைக் காண்க.

2. $y = 5 - x^2$ எனும் சார்பின் வரைபை வரைவதற்கு தயாரிக்கப்பட்ட பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

x	-3	-2	-1	0	1	2	3
y	-4	1	4	.....	4	1	-4

   i) x இன் பெறுமானம் பூச்சியமாகும் போது y இன் பெறுமானம் யாது?


   ii) x, y அச்சுகளில் 10 சிறு பிரிவுகளை ஓரலகாகக் கொண்டு மேலுள்ள சார்பின் வரைபை வரைக.

   iii) சார்பு நேராகக் குறையும் x இன் பெறுமான வீச்சை எழுதுக.

   iv) $5 - x^2 = 0$ எனும் சமன்பாட்டின் மூலங்களைக் காண்க.

   v) மேலுள்ள வரைபு y அச்சில் இரண்டு அலகுகள் கீழ்நோக்கி இடம் பெயர்வதால் பெறப்படும் வரைபிற்கான சார்பின் சமன்பாட்டை எழுதுக.

3. ஆரை 28cm கொண்ட உருளை வடிவ பாத்திரத்தில் 10cm உயரத்திற்கு நீர் உண்டு. அந்நீர் உருவிலுள்ள கனவுரு வடிவப் பாத்திரமொன்றினுள் ஊற்றப்படுகிறது.



   i) உருளை வடிவப்பாத்திரத்திலுள்ள நீரின் கனவளவைக் காண்க.

   ii) கனவுரு வடிவப் பாத்திரத்தில் நீர் எவ்வளவு உயரத்திற்கு உயரும்?

   iii) கனவுரு வடிவப் பாத்திரத்திற்கு மேலும் 360 ml நீர் இடப்பட்டு நிமிடத்திற்கு 5l வீதம் நீரைப் பாய்ச்சும் குழாயொன்றினால் பாத்திரத்தின் நீர் வெளியேற்றப்படுகிறது. பாத்திரம் முற்றாக வெறுமையாவதற்கு எடுக்கும் காலத்தைக்கைக் காண்க.


இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது

4. a) மரக்கன்று விற்பனை நிலையமொன்றில் ஒரு மா மரக்கன்று ரூபா 80 உம், ஒரு கொய்யா மரக் கன்று ரூபா 50 உம் ஆகும். சாந்தி அவற்றுள் மா மற்றும் கொய்யா மரக் கன்றுகளாக 20 கன்றுகள் கொள்வனவு செய்தார். அதற்காக அவற்றுக்கு ரூபா 1360 செலவாகியது. அவள் கொள்வனவு செய்த மா மரக்கன்றுகளின் எண்ணிக்கையை x எனவும், கொய்யாக் மரக் கன்றுகளின் எண்ணிக்கையை y எனவும் கொண்டு ஒருங்கமை சமன்பாட்டுச் சோடியொன்றை ஆக்கி சாந்தி கொள்வனவு செய்த மா, கொய்யா மரக்கன்றுகளின் எண்ணிக்கைகளை வேறு வேறாகக் காண்க.

   b) $2x - 3 < 7$ எனும் சமனிலையைத் தீர்த்து x கொள்ளும் உயர் முழுவெண் பெறுமானத்தைக் காண்க.

---

5. ΔABC யில் BC இன் நீளம் x *cm* ஆகும். AB இன் நீளம் BC இன் நீளத்திலும் 2cm குறைவாகும்.



   i) AB யின் நீளத்தை x சார்பில் எழுதுக.

   ii) ΔABC யின் பரப்பளவு $24cm^2$ எனின் x இலான இருபடிச் சமன்பாடொன்றை ஆக்குக.

   iii) அதனைத் தீர்த்து BC இன் நீளத்தைக் காண்க.

   iv) அதிலிருந்து AC இன் நீளத்தைக் காண்க.

---

6. சிறுவர் ஆடை விற்பனை நிலையமொன்றில் ஒரு மாதத்தில் விற்பனை செய்யப்பட்ட காற்சட்டைகளின் எண்ணிக்கை தொடர்பான அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

காற்சட்டைகளின் எண்ணிக்கை	4 - 8	9 - 13	14 - 18	19 - 23	24 - 28	29 - 33
நாட்களின் எண்ணிக்கை	2	4	10	6	4	4

   i) இம் மீடிறன் பரம்பலின் ஆகார வகுப்பு எது?


   ii) ஒரு நாளில் விற்பனை செய்யப்பட்ட காற்சட்டைகளின் இடை எண்ணிக்கையைக் காண்க.

   iii) விற்பனை செய்யப்பட்ட ஒவ்வொரு காற்சட்டையிலிருந்தும் ரூபா 180 இலாபம் பெறப்படுமெனின் இம்மாதத்தில் பெறலாமென எதிர்பார்க்கும் ஆகக் குறைந்த இலாபம் ரூபா 91 800 எனக் காட்டுக.

www.kedu.lk

B - பகுதி

7. சரீனா தனது வீட்டு முற்றத்தில் அந்தூரியம் சாடிகளை நடுவில் ஒன்றும் அடுத்த முதல் வட்டத்தில் நான்கும், இரண்டாம் வட்டத்தில் ஏழும் என்றவாறு வட்ட ஒழுங்கில் வைத்திருந்தாள்.



i) இக் கோலத்திற்கேற்ப 3 ஆம் வட்டத்தில் உள்ள சாடிகளின் எண்ணிக்கை யாது?

ii) இக் கோலத்திற்கமைய வைக்கப்பட்டுள்ள சாடிகளின் எண்ணிக்கையைக் காட்டும் எண்கள் எவ்விருத்தியில் அமைந்துள்ளன.

iii) 10 வட்டங்களில் சாடிகள் வைக்கப்பட்டிருந்ததெனின், 10 ஆம் வட்டத்திலுள்ள சாடிகளின் எண்ணிக்கையை சூத்திரத்தைப் பயன்படுத்திக் காண்க.

iv) இவ்வொழுங்கமைப்பில் வைக்கப்பட்டுள்ள மொத்தச் சாடிகளின் எண்ணிக்கையைக் காண்க.

---

8. cm /mm அளவுகருவி, கவராயம் என்பவற்றை மட்டும் பயன்படுத்தி பின்வரும் அமைப்பைச் செய்க.

i) $AB = 7cm$, $B\hat{A}C = 60^0$, $AC = 5cm$ ஆகுமாறு முக்கோணி ABC ஐ அமைக்க.


ii) C யினூடாக AB யிற்கான சமாந்தரக் கோடொன்றை அமைக்க.

iii) $C\hat{A}B$ இன் இருசமகூறாக்கியை அமைத்து அது மேலே அமைத்த சமாந்தரக் கோட்டை சந்திக்கும் புள்ளியை D எனக் குறிக்க.

iv) D ஐ மையமாகவும், DB ஐ ஆரையாகவும் கொண்டு வட்டத்தை அமைத்து அதன் ஆரையை அளந்தெழுதுக.


---

9. ΔABC யில் $B\hat{A}C = 40^0$ ஆகும்.
$A\hat{B}C$, $A\hat{C}B$ என்பவற்றின் இருசம கூறாக்கிகள் x இல் சந்திக்கின்றன.
BXCY ஒரு சாய்சதுரமாகும். காரணம் காட்டி $B\hat{Y}C$ இன் பெறுமானம் காண்க.



---

10. உருவில் AB வட்டத்தின் விட்டமாகும். PB = BQ ஆகுமாறு P, Q ஆகிய புள்ளி வட்டத்தின் மீது அமைந்துள்ளன. AB, PQ என்பன X இல் இடை வெட்டுகின்றன.



i) $Q\hat{P}B = P\hat{A}B$ எனவும்

ii) $AB \perp PQ$ எனவும்


iii) AQ வை இணைத்து AP = AQ எனக் காட்டுக.

www.ikeot.lk

11. AB எனும் நிலைக்குத்துக் கட்டிடத்தின் அடி A யிலிருந்து 12m தூரத்தில் அதே கிடைத்தரையில் அமைந்துள்ள C எனும் இடத்திலுள்ள பிரதீப் என்பவர் கட்டிடத்தின் உச்சியை 40^0 ஏற்றக்கோணத்தில் காண்கிறார். மேற்கூறிய தகவல்களைப் பரும்படிப் படமொன்றில் காட்டி 1:200 எனும் அளவிடையில் அளவிடைப்படமொன்றை வரைந்து கட்டிடத்தின் உயரத்தைக் காண்க.
(பிரதீப்பின் உயரத்தைப் புறக்கணிக்க)

---

12. மூடப்பட்ட கூட்டினுள் 5 முயற்குட்டிகள் உள்ளன. அவற்றுள் 3 வெள்ளை நிறமும் எஞ்சிய இரண்டும் கருப்பு நிறமுமாகும். சசி கூட்டைத் திறந்ததும் ஒரு முயற் குட்டி வெளியே வந்தது. அதனைப் பிடித்து கூட்டினுள் இட்டு சசி கூட்டை மூடினான். பின்னர் ரஜித கூட்டைத் திறந்தபோது மீண்டும் ஒரு முயற்குட்டி வெளியே வந்தது.
   i) மேற்கூறிய நிகழ்ச்சிக்கான மாதிரிவெளியை நெய்யரி ஒன்றில் காட்டுக.
   ii) இரு தடவைகளும் ஒரு வெள்ளை நிற முயற்குட்டி வெளியே வருவதற்கான நிகழ்தகவைக் காண்க.
   iii) முதலில் கறுப்பு நிறக்குட்டியும் இரண்டாம் தடவை வெள்ளை நிறக் குட்டியும் வெளியே வருவதற்கான நிகழ்ச்சியை நெய்யரியில் வட்டமிட்டுக் காட்டுக.
   iv) சசி கூட்டைத் திறந்ததும் வெளியே வந்த முயற்குட்டியைக் காட்டும் பூரணமற்ற மரவரிப்படம் கீழே காட்டப்பட்டுள்ளது. அதனை உமது விடைத்தாளில் பிரதி செய்து இடைவெளியை நிரப்புக.



   v) ரஜித கூட்டைத் திறந்த போது வெளியேறிய முயற்குட்டியைக் காட்டும் விதத்தில் அதனை விரிவு படுத்துக. ஒரு தடவையேனும் கறுப்பு நிற முயற்குட்டியொன்று வெளியே வருவதற்கான நிகழ்தகவைக் காண்க.

www.ikeau.lk

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.

www.lkedu.lk